بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2:5, ஸபர், 1427, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, E-Mail : suvanam@gmail.com

## படம் பார்த்து பகை கொள்

– அபூ உமர்

ஓவிய தூரிகையால் பற்றவைக்க முடியுமா? என்ற கேள்விக்கு விடைதான் கடந்த சில வாரங்களாக நடந்துகொண்டிருக்கும் நிகழ்ச்சிகள்.

திருக்குர்ஆனும் முஹம்மது நபியின் வாழ்க்கையும் (The Quran and the prophet Muhammad's life) என்ற குழந்தைகளுக்கான புத்தகம் எழுதிய டென்மார்க் எழுத்தாளர் Kare Bluitgen என்பவர் முஹம்மது நபி அவர்களைக் குறித்து குழந்தைகளுக்கு விளக்கத் தனக்கு முஹம்மது நபி அவர்களை விளக்கும் சித்திரம் தேவைப்படுவதாகவும், ஆனால் அதனை வரைந்து கொடுக்க யாருக்கும் தைரியம் இல்லை என்றும் கூறியிருக்கிறார். முஹம்மது நபி அவர்களை உருவமாக வரைவது இஸ்லாமியர்களிடம் இருந்து எதிர்ப்பை ஏற்படுத்தும் என்பதால் யாருமே இதற்கு முன்வரவில்லை.

டென்மார்க்கின் முன்னணி பத்திரிக்கையான Jyllands-Posten டென்மார்க்கில் உள்ள காட்டுனிஸ்டுகளிடம் முஹம்மது நபியை நீங்கள் எப்படி பார்க்கிறீர்களோ அப்படியே வரையுங்கள் (to draw Muhammad as they see him) என்று கூறியிருக்கிறது.

செப்டம்பர் 30, 2005ல் “லாயிலாஹ இல்லல்லாஹ்” என்ற வாசகம் எழுதிய திரி கொளுத்தப்பட்ட வெடிகுண்டுத் தலைப்பாகையை அணிந்தவர் போல தொடங்கி 12 கார்ட்டூன்களை இந்த பத்திரிக்கை வெளியிட்டது. இதனால் டென்மார்க் முஸ்லிம்களின் எதிர்ப்புக்கு ஆளானது. இப் பத்திரிக்கை பிறகு உலகின் பல பகுதியிலிருந்து இஸ்லாமிய அறிஞர்களும், முஸ்லிம் நாட்டுத் தூதுவர்களும் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்தார்கள். இருந்தாலும் இவையனைத்தும் கருத்துச் சுதந்திரம் என்ற வார்த்தையை வைத்து அந்தப் பத்திரிக்கை நிறுவனம் தனது காதை அடைத்துக்கொண்டது. இதனைப்பார்த்த ஐரோப்பிய ஒன்றியத்தின் மற்ற இஸ்லாமிய எதிர்ப்பு பத்திரிக்கைகள் ஜனவரியில் அதனை மறுபதிப்பு செய்தன. மறுபதிப்பு செய்த இதழ்களில் ஒன்றான நார்வே கிறிஸ்டியன், வாசகர்களிடமிருந்து வரும் முஹம்மது நபி பற்றிய சிறந்த கார்ட்டூனுக்கு பரிசு என்றும் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

டென்மார்க் பிரதமர் ஆண்டர்ஸ் ∴போக்ரஸ்முஸ்ஸென் இது கருத்துச் சுதந்திரம் பற்றிய விஷயம் எனவும் இதில் தங்களால் தலையிட முடியாது என்று சொன்னதோடு உலகின் கருத்துச் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கும் நான்கு நாடுகளில் டென்மார்க்-கும் ஒரு நாடு என்பதாக பீற்றிக்கொண்ட நேரத்தில், விஷயம் பற்றிக்கொள்ள ஆரம்பித்துவிட்டது.

கதை சொல்வதற்கு கார்ட்டூன் வரைந்ததுபோலவும் முஸ்லிம்கள் முஹம்மது நபியின் கார்ட்டூன் வரைந்ததற்காக ஏன் கோபப்படவேண்டும் என்ற கேள்வி கேட்டு பிரச்னையை திசை திருப்பும் முயற்சியில் இஸ்லாத்தின் எதிரிகள் அவர்களின் மீடியாவை முடுக்கிவிட்டுள்ளார்கள். இவர்கள் என்ன கதை சொல்ல விரும்புகிறார்கள் என்பதை வெடிகுண்டு தலைப்பாகை கார்ட்டூனைப் பார்த்தாலேயே எவருக்கும் எளிதில் புரியும்.

12 கார்ட்டூன்களை தவிர இதே சூழ்நிலையில் வெளியிடப்பட்ட வேறு ஒரு கார்ட்டூனையும் இங்கு உதாரணத்திற்கு சொல்லலாம். “முஸ்லிம்கள் தொழவில்லை, தலையை மண்ணில் புதைக்க முயலுகிறார்கள்” என்ற பொருள்பட

(தொடர்ச்சி 4–ஆம் பக்கம் பார்க்க..)

## உள்ளே

இந்தியா சில ஒளிரும் தகவல்கள்- 5
இஸ்லாத்தில் தீண்டாமையா? - 6
அன்னையரே அமுதூட்டுங்கள் - 7
சுவனப்பதை நடத்தும் எழுத்துப் போட்டி
(தலைப்புகள் மற்றும் விதிமுறைகள்) - 9
தேனீக்கள் (அறிவியல் தொடர்)- 10
குறுக்கெழுத்துப் போட்டி- 12

## மாதத்திலுமா மாற்றாரின் கலாச்சாரம்!

–நெல்லை இப்னு கலாம் ரசூல்

வல்ல அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம். இஸ்லாமல்லாத எந்த ஒரு மதமோ மார்க்கமோ அதனைப் பின்பற்றுவோருக்கு அல்லாஹ்விடம் திருப்பொருத்தத்தைப் பெற்றுத்தராது என்பதற்கு அருள்மறையில் ஆதாரங்கள் உள்ளன.

உத்தம திருநபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், எவர் பிறமத கலாச்சாரங்களைப் பின்பற்றுகிறாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே.

**அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)**
**ஆதாரம்: ஆபூதாவூத், அஹ்மத்**

நாம் பின்பற்றிவரும் இஸ்லாமிய மார்க்கத்தில் நம்மையும் அறியாமல் நாம் செய்யும் சிலகாரியங்கள் பிறமத கலாச்சாரங்களை ஒத்து இருப்பதை நம்மால் மறுக்க முடியாது. உதாரணத்திற்கு ஒருசில அமல்களைப் பார்ப்போம். திருமணத்தில் வரதட்சணை வாங்குதல், மொய் எழுதுதல், பருவமெய்த பெண்ணுக்குப் புனித நீராட்டுதல், நிச்சய தாம்பூலம், மரணத்தில் ஒப்பாரி, மரணித்தவருக்காக 7, 10, 20, 40ஆம் நாட்களில் ∴பாத்திஹா மற்றும் வருட ∴பாத்திஹா, கப்ருகளில் வணக்க வழிபாடுகள், திருவிழாக்களில் ஆட்டம் பாட்டு சல்லாபங்கள், பிறந்தநாள் உரூஸ் வைபங்கள் என பட்டியல் நீளுகிறது.

நாம் செய்யும் ஒவ்வொரு அமலும் நமக்கு நன்மை பயக்க அதற்கு இரண்டு அடிப்படைகளேயுள்ளன. ஒன்று செய்யும் அக்காரியம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற மனத்தூய்மை எனும் இக்லாஸுடன் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும் மற்றொன்று அக்காரியம் அல்லாஹ்வும் அவன் திருத்தூதரும் காட்டித்தந்த வழிமுறையில் அமைந்திருக்க வேண்டும் இவ்விரண்டு அடிப்படைகளை விட்டுவிட்டுச் செய்யப்படும் எந்தக் காரியங்களும் மனோ இச்சையைப் பின்பற்றி ஆற்றப்படுபவைகள்தானேயொழிய மறுமையில் எந்த நன்மையும் இக்காரியங்களுக்கு கிடைக்காது மாறாக தண்டனையையும், இழிவையும் பெற்றுத்தரும் என்பதற்கு சில சான்றுகளை காணலாம்.

எவர் மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதுமையைப் புகுத்துகிறாரோ அவருக்கும் அல்லது அதற்கு இடமளிப்பவருக்கு அவர்கள் மீது அல்லாஹ்வின், மலக்குகளின், மனிதர்களின் சாபம் ஏற்படுகிறது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அலி(ரலி)*
**ஆதாரம்: ஆபூதாவூத், நஸயீ**

மற்றொரு நபிமொழியில், வார்த்தைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம், நடைமுறையில் சிறந்தது நபி(ஸல்) அவர்களின் நடைமுறை, காரியங்களில் கெட்டது மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவை (பித்அத்), பித்அத்துகள் அனைத்தும் வழிகேடுகளாகும், வழிகேடுகள் அனைத்தும் நரகில் கொண்டு சேர்க்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி)*
**ஆதாரம்: புகாரி**

மார்க்கத்தில் இல்லாத ஒன்றை நவீனமாக உருவாக்கிய பித்அத்துகள் மறுமையில் எந்த பயனுமளிக்காது என்பதை கீழ்கண்ட நபிமொழி கூறுவதைப் பாருங்கள். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த மார்க்கத்தில் இல்லாத ஒரு விஷயத்தை ஒருவன் புதிதாக உண்டாக்குவானேயானால், அது மறுக்கப்பட வேண்டியதாகும்.

*அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)*
**ஆதாரம்: புகாரி, முஸ்லிம்**

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், எந்தக் காரியத்திற்கு நமது உத்தரவு இல்லையோ அந்தக் காரியத்தை யார் செய்கின்றாரோ அது நிராகரிக்கப்பட வேண்டியதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நாம் செய்யும் காரியங்களில் மாற்றாரைப்போல் அவர்களின் கலாச்சாரங்களை ஒத்திருக்கும் செயல்களில் ஒன்றுதான் ஸபர் மாதத்தை பீடை மாதம் எனக்கருதி ஒதுக்குவது. அன்றைய அறியாமைக்கால அரபியர்கள் ஷவ்வால் மாதத்தில் எந்த சுபகாரியங்களையும் செய்யாமல் தடுத்ததுடன் அக்காரியங்களைக் காலம் தாழ்த்திச் செய்து வந்தனர் அக்காலங்களில் நிகழும் எந்த சுபகாரியங்களும் நன்மை பயக்காது என திடமாக நம்பினர் அறியாமைக்கால அரபியர்களின் இந்த மூடநம்பிக்கையின் முதுகெலும்பினை முறிக்கும் வகையில் உம்முல் மு.:.மினின் அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் நான் ஷவ்வால் மாதத்தில்தான் திருமணம் முடித்தேன், ஷவ்வால் மாதத்தில்தான் என் இல்லற வாழ்வைத் தொடர்ந்தேன் மேலும், நபி(ஸல்) அவர்களுக்கு என்னைவிட மிக விருப்பமுள்ள மனைவியாக இருந்தது யார்? எனக் கூறினார்கள்.

*அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)*
**ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத்**

ஷவ்வால் மாதம் பீடை மாதம் என்றிருந்த அந்த நிலை சற்றுமாறி மாற்றார் தம் மத நம்பிக்கையின் பிரகாரம் ஆடி மாதம் பீடை மாதம் அந்நாளில் வீடுகூடும் புதுமணத் தம்பதியர்கள் அனர்த்தம் அடைவர் என்னும் ஐதீகம் அம்மக்களின் மனதில் நம்பிக்கையாய் இருந்தது எனவே புதிதாக மணமுடித்த தம்பதியர்களைத் பிரித்து வைக்கும் பழக்கம் அவர்களிடம் இன்றுமுள்ளது இதைப் போன்றே எந்த ஆதாரமுமில்லாத ஒரு கருத்து முஸ்லீம்களிடமும் நிலவி வருவதைப் பார்க்கிறோம்.

ஸபர் மாதம் பீடை மாதம் ஸபர் கழிவு அல்லது ஒடுக்கத்துப்புதன் என்றழைக்கப்படும் அம்மாதத்தின் கடைசிப் புதனன்று நிகழ்த்தப்படும் சில புதுமைகள் இவை. ஸபர் மாதத்தில் நிகழும் அலங்கோலங்கள். இவ்வாறு ஸபர் மாதத்தில் நாம் நடக்க ஷரிஅத்திலோ மார்க்க அறிஞர்களின் எந்த வழிகாட்டுதலுமில்லை இருப்பினும் மார்க்கத்தை வைத்து பிழைப்பு நடத்தும் சிலர் ஸபர் மாதப் பீடையைப் போக்க மாஇலையில் சில தெரியாத வாசகங்களை அரபியில் மையினால் எழுதி அதை நீரில் கரைத்துக் குடிக்கும் புதுமையைப் புகுத்தியுள்ளனர் அந்நாளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கடற்கரைக்கோ, ஆற்றாங்கரைக்கோ, புல்வெளிகளுக்கோ சென்று நீராடி தர்ஹாக்களில் தரிசனம் பெற்றால் ஸபர் மாதம் பீடை நீங்கும் என்னும் அறியாமை இன்னும் நிலவி வருகிறது.

அல்லாஹ் படைத்த இக்காலங்களில் இது கெட்டது, இது நல்லது எனப் பிரிக்கும் அதிகாரம் அல்லாஹ்வின் படைப்பினத்திற்கு அறவேயில்லை மேலும், காலங்களில் நிகழும் நல்லது கெட்டவைகளை முன்கூட்டியே அறியும் மறைவான ஞானமோ அல்லாஹ்வையன்றி வேறு எவருக்மேயில்லை மனிதன் தன் கைவசமில்லாத ஒரு அறிவை எல்லாம் அறிந்ததுபோல் செய்யும் இது போன்ற அனாச்சாரங்கள் காலத்தைப் பழிப்பது போன்றதாகும்.

நபி(ஸல்) அவர்கள் ஸபர் மாதத்தில் தான் நோய்வாய்ப் பட்டார்கள் எனக் கூறுவோர் அதே ஸ.:.பர் மாதத்தில்தான் உத்தம திருநபி(ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணம் இஸ்லாமிய வரலாற்றில் முத்திரை பதித்தது இஸ்லாமிய ஆட்சி வேரூன்ற அடித்தனமாயிற்று என்ற அடிப்படையையும் உணரவேண்டும்.

சின்ன நகஸு, பெரிய நகஸு என மக்களுக்கு மடமையைத் திணிக்கும் பால் கிதாபு ஜோஸியர்கள்கூட தங்களுக்கு எந்த நாள் நன்மையையும் பன்மடங்கும் லாபமும் தரக்கூடியது என்பதை அறிய இயலாதவர்கள். சுருக்கமாக கூறினால் ரபீஉல் அவ்வல் 12ஆம் நாள் நபி(ஸல்) அவர்கள் பிறந்தார்கள் எனக் கூறினால் அதே நாளில்தான் நபி(ஸல்) அவர்களின் மரணமும் நிகழ்ந்துள்ளது ஆகவே இன்ப துன்பத்திற்கு எந்த நாளுமில்லை.

“ஆதமின் மகன் என்னைப் புண்படுத்துகிறான். அவன் காலத்தை ஏசுகிறான். நானே காலம் (படைத்தவன்) என் கையிலேயே அதிகாரம் உள்ளது நானே இரவு பகலை மாறி மாறி வரச் செய்கிறேன் என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்கள்.”

**ஆதாரம் : புகாரி**

மனிதனின் இந்த அறிவீனத்தை அல்லாஹ் அருள்மறையில் கண்டிக்கும் வகையில் இவ்வாறு கூறுகிறான்

**இன்னும் (நபியே) அல்லாஹ் உமக்கு ஏதாவது (ஒரு) துன்பத்தைக் கொண்டு பீடிப்பானாகில் அதனை நீக்குவோர் அவனையன்றி வேறு ஒருவரும் இல்லை**

**(அவ்வாறே) அவன் உனக்கு ஒரு நன்மையை ஏற்படுத்தித் தந்தால் (அதைத் தடுத்துவிடுவோர் எவருமில்லை) அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.**

***(அல்-குர்ஆன் 6: 17)***

நபியைக் கொண்டு நமக்கு அறிவுறுத்தும் இக்கருத்துக்களை மற்றொரு வசனத்தின் மூலம் மனிதனுக்கு மறைவான ஞானம் இம்மியளவும் இல்லை என்பதை இடித்துரைப்பதைப் பாருங்கள்

**மறைவானது அவர்களிடம் இருந்து (அதிலிருந்து தங்களுக்கு வேண்டிய ஆதாரங்களை) அவர்கள் எழுதுகின்றார்களா?**

***(அல்-குர்ஆன் 68: 47)***

அல்லாஹ் மட்டுமே மறைவானவற்றை அறிபவன் என்பதை மற்றொரு வசனத்தில்

**நிச்சயமாக அந்த (கியாம) நேரம் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே இருக்கிறது அவனே மழையையும் இறக்குகிறான் இன்னும் அவன் கர்ப்பங்களில் உள்ளவற்றையும் அறிகிறான். நாளை தினம் தாம் (செய்வது) சம்பாதிப்பது எது என்பதை எவரும் அறிவதில்லை தான் எந்த பூமியில் இறப்போம் என்பதையும் எவரும் அறிவதில்லை. நிச்சயமாக அல்லாஹ்தான் நன்கறிபவன் நுட்பம் மிக்கவன்.**

***(அல்-குர்ஆன் 31: 34)***

தினமும் ஒவ்வொரு வேளை தொழுகை முடிந்த பின், ஒரு முஸ்லிம் ஓதும் துஆவினை இங்கு நினைவு கூர்வது சாலச்சிறந்தது. "அல்லாஹும்ம லா மானிஅ லிமா அ.்.தைத்த வலா மு.்.த்திய லிமா மன.்.த்த வலா யன்.்.பஉ தல் ஜத்து மின்கல் ஜத்து"

யாஅல்லாஹ்! நீ கொடுத்ததை தடுப்பவர் யாருமில்லை நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமில்லை செல்வம் உடையவர் எவரையும் அவரின் செல்வம் உன் தண்டனையிலிருந்து காத்திட இயலாது.

***ஆதாரம் : (புகாரி, முஸ்லிம்)***

ஸபர் மாதத்தை பீடை மாதமாக கருதுவோர் அம்மாதத்தில் நிகழும் சுபகாரியங்களைத் தள்ளிப்போடுகின்றனர் இருப்பினும் அம்மாதத்தில் நிகழும் குழந்தைப் பிறப்பை, மரணத்தை, வியாபாரத்தில் வரும் லாப-நஷ்டத்தை, வெளிநாட்டு விசாவை என இறைவன் புறத்திலிருந்து வரும் எந்த ஒன்றையும் தடுத்து நிறுத்தவியலாது தத்தளிக்கின்றனர் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வரும் வேதனைகளை, தண்டனைகளைக் கண்கூடாக கண்ட பின்னரும்கூட படிப்பினை பெற வேண்டிய சமுதாயம் பாராமுகமாய் நூதன அனுஷ்டானங்களில் மூழ்கித் திளைப்பது மிக்க வேதனைக்குரிய ஒன்றாகும்.

இதுபோன்ற நூதன அனுஷ்டானங்களால் நாளை மறுமையில் மனிதர்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்படும் நாளில் தீராத தாகத்துடன் தவித்திருக்கும் வேளையில் கவ்தர் நீரை அருந்தும் பாக்கியமற்றவர்களாகப் போய் விடுவோம் என்கின்ற ஹதீஸினை நினைவூட்டி நம்மில் குடிகொண்டிருக்கின்ற ஸபர் பீடை மற்றுமல்லாத அனைத்து பித்அத்களையும் களைந்து குர்ஆன்-ஹதீஸ் காட்டித்தந்த வழிமுறைகளை மாத்திரம் பின்பற்றி உயர்ந்த சுவர்க்கமாகிய ஜன்னத்துல் பிர்தௌஸை அடைய முயற்சிப்போமாக! அல்லாஹ் போதுமானவன்

☆ ☆ ☆

# பலசாலி - புத்திசாலி

நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: பலசாலி என்பவன் (எதிரியை) கீழே வீழ்த்துபவன் அல்லன். மாறாக கோபத்தின்பொழுது யார் தன்னைக் கட்டுப்படுத்துகிறானோ அவன் தான் பலசாலி!

***அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி),***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

"நான் நபி(ஸல்) அவர்களின் அவையில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது இரு மனிதர்கள் பரஸ்பரம் ஏசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரின் முகம் சிவந்துவிட்டது. அவருடைய நரம்புகள் புடைத்துவிட்டன. அப்பொழுது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் "நான் ஒரு வார்த்தையை அறிவேன்". அதை அவர் கூறினாரெனில் அவரது கோபம் அகன்றுவிடும். "விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" (அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம்) என்று அவர் சொன்னால் அவரது கோபம் போய்விடும்! அப்பொழுது மக்கள் அந்த மனிதரை நோக்கிச் சொன்னார்கள்: விரட்டப்பட்டஷைத்தானை விட்டும் நீ அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுமாறு நபியவர்கள் சொல்கிறார்கள்"

***அறிவிப்பவர் : ஸுலைமான் பின் ஸுர்த்(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து எனக்கு அறிவுரை கூறுங்கள் என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதிருப்பாயாக என்றார்கள். மீண்டும் அறிவுரை கூறுமாறு பல தடவை அவர் கேட்டதற்கும் நபிகளார்(ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதிருப்பாயாக என்றே பதில் அளித்தார்கள்!

***அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி)***

***ஆதாரம் : புகாரி***

நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: விசுவாசம் கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் - அவர்களுடைய உயிர், பிள்ளைகள் மற்றும் செல்வம் ஆகியவற்றில் கஷ்டம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். (அவர்களுடைய தவறுகளுக்கு அது பரிகாரமாகிவிடுவதால்) இறுதியில் அவர்கள் மீது எவ்வித தவறும் இல்லாத நிலையில் அல்லாஹ்வை அவர்கள் சந்திக்கிறார்கள்!

***ஆதாரம் : திர்மிதி***

***அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி)***

*(முதல் பக்கத் தொடர்ச்சி ."படம் பார்த்து பகை..")*

உள்ள கார்ட்டூன், இவர்களின் மனதில் உள்ள காழ்ப்புணர்வை அறிந்துக்கொள்ள உதவுகிறது.

முஹம்மது நபியைப்பற்றி கேலிச்சித்திரம் வெளியாக்கிய பத்திரிக்கை நிர்வாகம், முன்பு ஏசு கிருஸ்து பற்றி கேலிச் சித்திரம் வெளியிட மறுத்த செய்தி இப்போது வெளிவந்துள்ளது. அதே போல கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அல்-ஜஸீரா தொலைக்காட்சி சேனலின் தலைமை நிலையத்தை கப்பற்படையிலிருந்து ஏவுகணை மூலம் தாக்கி அழிக்க முயற்சி செய்ததும் குறிப்பிடத்தக்கது. ஆக மேற்கத்தியர்களின் கருத்துச் சுதந்திரத்தின் லட்சணம் இதுதான் போலும்.

அரபு நாடுகளில் பெட்ரோலை ஏற்றுமதி செய்து எவ்வாறு செல்வம் கொழிக்கிறதோ, அதே போல பால் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் செல்வம் கொழிக்கும் டென்மார்க்கின் மடியில் அடிவிழுந்துள்ளது. டென்மார்க் பொருட்களை வாங்க மாட்டோம் என்ற வகையில் முஸ்லிம்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே, டென்மார்க் நிறுவனங்களுக்கு கோடி கணக்கில் தற்போது நஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன.



டென்மார்க், உலக வர்த்தக சபையில் (WTO) சவுதிக்கு எதிராக முறையிடப்போவதாக மிரட்டவே, டென்மார்க் பொருள் புறக்கணிப்பிற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சவுதி அரசாங்கம் கூறிவிட்டது. கடந்த டிசம்பர் 11, 2005-ல் உலக வர்த்தக சபையில் சவுதி அரேபியா முழுமையான உறுப்பினராக இணைந்தது குறிப்பிடத்தக்கது.

உலகில் வாழும் பல கோடி முஸ்லிம்கள் எதிர்ப்பு பேரணி தொடங்கவே, நிலைமை கட்டுக்கடங்காமல் போய் கடைசியாக லெபனான், சிரியா போன்ற நாடுகளில் உள்ள டென்மார்க் தூதரகத்தை ஆர்பாட்டக்காரர்கள் எரிக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

"ஜைலாண்ட்ஸ் போஸ்டன்" நாளிதழின் முதன்மை ஆசிரியர், தங்களின் தவறுக்காக வருத்தம் தெரிவித்துவிட்டாலும், குறிப்பிட்ட கேலிச்சித்திரங்களை இணையத்திலும் பரப்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

ஐரோப்பிய நாடுகளின் இஸ்லாத்திற்கெதிரான நடவடிக்கைகள் ஒன்றும் புதிது அல்ல. முன்பு சல்மான் ருஷ்டி சாத்தானின் வசனங்கள் என்ற நாவல் வெளியிட்டு முஹம்மது நபி மற்றும் அவர்களின் மனைவியரை கேவலமாக எழுதியதால், ஈரான் அரசாங்கம் (கொமைனி) மரண தண்டனை விதித்தபோது, பல மில்லியன் டாலர்களை செலவழித்து சல்மான் ருஷ்டிக்கு (U.K)பாதுகாப்பு வழங்கியது.

இப்பிரசிச்னை இவ்வளவு பூதாகரமாகும் என்று ஐரோப்பா எதிர்பார்க்கவில்லை. மறுபதிப்பு செய்த சில நாளிதழ்கள் வருத்தம் தெரிவித்துள்ளன. சமரசத்திற்காக ஐரோப்பிய ஒருங்கிணைப்பு (E.U) அரபுநாடுகளுக்கு தனது தூதரை அனுப்பி வைத்துள்ளது.

கருத்துச் சுதந்திரத்தைத் தவறாக பயன்படுத்தி வெளியிடப்பட்ட இந்த கார்ட்டூன்களால் டென்மார்க் ஏற்றுமதி தொழில் பாதிப்படைந்ததோடு மட்டுமல்லாமல், லெபனான் தூதரக எரிப்பு என்று தொடங்கி பாகிஸ்தானில்

"கே.எ.ஃப் ஸி" யிலிருந்து "பிட்ஸா ஹட்" வரை பற்றி எரிவதை எண்ணி வருந்தாமல் இருக்க முடியாது. ஈராக் விவகாரத்தால் மேற்குலகிற்கும் அரபுலகிற்கும் ஏற்கனவே வெறுப்பு கனன்றுக் கொண்டிருக்கும் நிலையில், டென்மார்க் பத்திரிக்கையால் பெட்ரோல் ஊற்றப்பட்டுள்ளது.

இஸ்லாத்திற்கெதிரான செயல்களுக்கு எதிர்ப்பைப் பதியவைக்கும் வகையில் பேரணி நடத்துவது ஜனநாயக உரிமை என்றாலும், பொருட்களை நாசப்படுத்துவது இஸ்லாத்திற்கு எதிரான செயல் என்பதாக இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் கண்டித்துள்ளனர்.

முஹம்மது நபி பற்றி அவதூறாக படம் வரைந்த கார்ட்டூனிஸ்ட் தலையை கொண்டு வருபவருக்கு 51 கோடி ரூபாயும் தனது எடைக்கு நிகராக தங்கமும் பரிசு என்று உத்திர பிரதேச மாநில ஹஜ் மற்றும் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் முகம்மது யாகூப் கூறியுள்ளாராம். இவருக்கு மறைந்த ஈரான் இமாம் "கொமைனி" போல் பிரபலமடைய ஆசை வந்துவிட்டதோ என்னவோ.

கார்ட்டூனிஸ்ட் ஒருவர் அல்ல பலர், குற்றவாளி கார்ட்டூன் வரைந்தவரா, வெளியிட்டவரா?, இவர்தான் அனைத்து முஸ்லிம்களின் பொறுப்பாளரா? போன்ற கேள்விகளை யாரும் கேட்க வேண்டாம். (அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!!).

"படம் பார்த்து கதைச் சொல்"வதற்காக வரையப்பட்ட கார்ட்டூன்கள் அல்ல இவை. "படம் பார்த்து பகை கொள்"வதற்காக வரையப்பட்டவை என்பதே உண்மை.

* * *

## உங்களுக்குத் தெரியுமா?

1. **"sms"** என்பதன் விரிவாக்கம் என்ன?
2. ஆப்பிள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடு ?
3. கடற் பயணி சிந்துபாத் கடலில் மேற்கொண்ட பயணங்கள் எத்தனை?
4. சந்திரனில் அதிகமாகக் காணப்படும் தனிமம் ?
5. "நெஸ்லே" நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்தது?
6. உலகில் கிருத்துவ மதத்தை தனது நாட்டு மதமாக அறிவித்த முதல் நாடு?
7. புகையிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடு?
8. பிரிட்டனில் மாணவ வீசா வைத்திருக்கும் ஒருவர் வாரத்திற்கு எத்தனை மணிநேரம் பணி செய்ய அனுமதிக்கப்படுவார்?
9. "ஜாமியா மில்லியா" இஸ்லாமிய பல்கலைக்கழகம் எங்குள்ளது?
10. தயிரில் அடங்கியிருக்கும் அமிலம்?

***(விடைகள் : 5-ம் பக்கம்)***

# இந்தியா..! சில ஒளிரும் தகவல்கள்!! (சென்ற மாதத் தொடர்ச்சி..)

– கோவை. பஷீர்

❖ உலகின் மிகப்பெரிய ரயில்வே நெட்வொர்க் இந்தியன் ரயில்வேதான்.

❖ இந்தியாவிலேயே பணப் புழக்கம் அதிகமாக உள்ள நிறுவனங்களில் முதல் நிறுவனம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்தான். (ஆண்டுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய்)

❖ இந்தியாவில் கம்ப்யூட்டர் கல்வித் துறையில் புழங்கும் பணத்தின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய்.

❖ இந்தியாவில் காற்று மூலம் மின் உற்பத்தியில் (Wind Mill Power) 60% தமிழ்நாட்டில்தான் உற்பத்தியாகிறது.

❖ இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தோல் பொருட்களின் மதிப்பு ஆண்டுக்கு 9 ஆயிரம் கோடி ரூபாய்.

❖ உலகிலேயே மிக அதிக அளவிலான ஜவுளிகள் தயாரிப்பு செய்யும் நாடுகளில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது.

❖ உலகின் முன்னணி கம்ப்யூட்டர் நிறுவனங்களான IPM, MicroSoft, Sun Micro System போன்ற பல கம்பெனிகளை நிர்வகிப்பது நமது இந்திய இளைஞர்கள்தான்.

❖ செயற்கை மனித உறுப்புகள் இந்தியாவில் ஜெய்ப்பூரில் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் விற்பனை நடைபெறுகிறது.

❖ உலக பணக்காரர்கள் பட்டியலில் லண்டன் வாழ் இந்தியர் (லஷ்மி மிட்டல்) 3வது இடத்தில் இருக்கிறார்.

❖ உலகிலேயே மிகப்பெரிய கல்விக் கட்டமைப்பு மற்றும் உயர்கல்வி அமைப்பு (Infra Structure & Higher Education System) கொண்ட நாடு அமெரிக்கா. அதற்கடுத்த இடம் இந்தியாதான்.

❖ இந்தியாவில் மொத்தம் 300 பல்கலைக்கழகங்கள், 13000 கல்லூரிகள் உள்ளன.

இந்தியாவின் இன்னும் பல சிறப்புகளை இப்படியாக பட்டியலிட்டுக்கொண்டே செல்லலாம். கடந்த காலங்களை விட தற்போதைய இந்தியாவின் பொருளாதாரம், தனிமனித சராசரி வருமானம், கல்வியறிவு போன்றவற்றிலும் இந்தியா நல்ல முன்னேற்றம் கொண்டுள்ளது. இதுவரை வளர்ந்த நாடுகள் மட்டும் ஆராய்ச்சி செய்து வந்த Bio Technology என்றழைக்கப்படும் உயிரியல் தொழில் நுட்பத்துறையில் அந்த நாடுகளுடன் போட்டி போடும் அளவிற்கு இந்தியா முன்னேறியுள்ளது. பல வெளிநாட்டு கம்பெனிகள் இந்தியாவில் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து தொழில் தொடங்க முன்வந்துள்ளன. இயற்கை வளங்களை தெரிந்து கொண்டு அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள பல செயற்கைக் கோள்களை இந்தியா விண்ணுக்கு அனுப்பியுள்ளது.

ஆக கி.பி 2020க்குள் நமது இந்தியா நல்ல வல்லரசு நாடாக மாறும் என்று அப்துல் கலாம் கூற்றுக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனாலும் இப்படி ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற இந்தியாவை முறையற்ற அரசியல், திறமை உள்ளவர்களுக்கு போதிய வாய்ப்பு இல்லாமை ஜாதிப் பிரச்சனை, வறுமை போன்ற பல விஷயங்கள் ஆங்காங்கே தோன்றி ஒளி மங்கச் செய்து கொண்டிருந்தாலும் உலகத்தில் எல்லா நாடுகளிலும் உள்ள பொதுவான பிரச்சனைகள்தான் இது என்று நாம் அலட்சியப்படுத்தினாலும் தற்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் ஒரு பிரச்சனையை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது. அது எய்ட்ஸ். ஆம் அன்பர்களே.. இந்த எய்ட்ஸ் விஷயத்திலும் இந்தியா முன்னிலையில்தான் உள்ளது.

தற்போது உலக மக்கள் அனைவரையும் அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இந்த உயிர்க்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது.

கலாச்சாரச் சீரழிவு, தனிமனித ஒழுக்கமின்மை, அறியாமை, போதிய விழிப்புணர்வு இல்லாமை போன்ற பல காரணங்களை நாம் முன்னிலைப்படுத்தினாலும் தனிமனித ஒழுக்கம் மூலம் இந்த நோயை நாம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும்.

இப்படிப்பட்ட சீரழிவிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அல்குர்ஆன் பின்வருமாறு நம்மை எச்சரிக்கை செய்கிறது.

**“வெளிப்படையான, இரகசியமான, மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள்” (அல்-குர்ஆன் : 06:151)**

**நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள். நிச்சயமாக அது மானக் கேடானதாகும் மேலும் (வேறு கேடுகள் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது. (அல்-குர்ஆன் : 17:32)**

எந்தத் தவறுமே செய்யாத நல்லவர்களும், எந்த விபரமே அறியாத குழந்தைகளும் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். என்பதுதான் வேதனையின் உச்சகட்டம்.

ஆக மொத்தத்தில் விழிப்புணர்வுடன் இருந்து எய்ட்ஸிலிருந்து நம்மை காத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்த இதழில் தமிழ்நாட்டைப் பற்றிய சில ருசிகர தகவல்கள் **(இன்ஷாஅல்லாஹ்)**

**உங்களுக்குத் தெரியுமா?**

**விடைகள்**

1. short message service
2. ரஷ்யா
3. ஏழு
4. ஹீலியம்
5. சுவிட்சர்லாந்து
6. அர்மீனியா
7. சீனா
8. இருபது
9. புதுடில்லி
10. லாக்டிக்

# இஸ்லாத்தில் தீண்டாமையா?

*—ஸாலிஹ் குலசை*

உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டுமாக! மீண்டும் நம்மை சந்திக்கவைத்த அந்த அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும்.

இன்றும் தீண்டாமை என்ற பெயரில் எப்படியெல்லாம் மடத்தனமான காரியங்களை செய்கின்றனர் என்பதை பார்ப்போம்.

எங்கள் வீடு என்பது மிகவும் ஆச்சாரங்கள் நிறைந்த வீடு. சைவ சாப்பாட்டிற்கு ஒரு பாத்திரம், அசைவ சாப்பாட்டிற்கு ஒரு பாத்திரம் எனவும் தினமும் அதிகாலையிலேயே குளித்து பூஜை நடத்தும் வீடு. நான் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் பொழுது சாயங்காலம் தினமும் பள்ளிக்கூடம் முடிந்தவுடன் எங்கள் ஊர் கண்மாயில் (ஏரியில்) கபடி விளையாடிவிட்டு வீடு திரும்புவது வழக்கம்.

என்னுடைய நண்பர்கள் அனைவருமே அரிஜன நண்பர்கள் தான். அவர்களோடு விளையாடிவிட்டு வீட்டிற்கு திரும்பியவுடன் என்னை என் தந்தை குளித்துவிட்டு வந்தால்தான் வீட்டிற்குள்ளேயே அனுமதிப்பார், இது தினமும் நடக்கும் விஷயமாகும். ஒரு முறை வழக்கம் போல் கபடி விளையாடிவிட்டு வீட்டிற்கு வந்தேன் வாசலில் நின்று கொண்டு என் தந்தை குளித்துவிட்டு வா என்றார்கள். நான் புத்தக பையையும் சாப்பாட்டு சட்டியையும் வாசலிலேயே வைத்துவிட்டு குளிக்க சென்றவன் குளிக்காமல் திரும்பி வந்துவிட்டேன்.

என் தந்தை குளித்துவிட்டாயா என்று கேட்டார்கள் நான் இல்லையென்றேன், ஏன் குளிக்கவில்லை என கேட்டார்கள் அந்த கண்மாயில் (ஏரியில்) அரிஜன பையன் ஒருவன் குளிக்கின்றான் அதனால் நான் குளிக்கமாட்டேன் என்று சொன்னேன். புள்ளே தோளுக்கு மேலே வளந்துட்டாருல்ல அதனாலே அப்படித்தான் பேசுவாரு. பெரிய புத்திசாலின்னு நெனப்பு என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டார்கள். அன்று முதல் என்னிடம் எதுவுமே சொல்வதில்லை.

## மற்றொரு சம்பவம்

நான் படித்த பள்ளிக்கூடத்திற்கு பக்கத்தில் ஒரு பிராமண வீடு உள்ளது. என்னுடைய நண்பர் வீட்டார்தான் அந்த பிராமணர் வீட்டாரின் துணிகளையெல்லாம் துவைத்து கொடுப்பார்கள். அவ்வாறு துவைத்து கொண்டு வரும் துணிகளை வீட்டின் வாசலிலேயே வைத்துவிடவேண்டும். அந்த துணிகளை தண்ணீர் தெளித்து தான் வீட்டிற்குள் எடுத்து செல்லப்படும். இதுபோன்ற சம்பவங்களையெல்லாம் வெறுத்து ஒதுங்கியிருந்தது ஒரு கூட்டம் இப்படி செய்வதை புண்ணியமாக கருதியது மற்றொரு கூட்டம். நான் வெளிநாட்டிற்கு வந்த பிறகு ஒரு தி.க காரருடைய ஆடியோ கேஸட் ஒன்று கேட்க கிடைத்தது. அதில் அவர் கூறுகின்றார் பிராமணர்கள் ஏன் மாட்டு மூத்திரத்தை குடிக்க கொடுக்கின்றார்கள் தெரியுமா? உனக்கு புத்தி வந்துவிட்டதா இல்லையா என்று மாட்டு மூத்திரத்தை குடிக்க கொடுத்து உன்னை பரிசோதிக்கின்றான் என்று கூறியது இன்னும் என் காதில் கேட்டுக் கொண்டே இருக்கின்றது.

## இதோ சத்தியம் வந்தது

இஸ்லாத்தில் ஒருவரை கேலி செய்வதும் கண்ணியக் குறைவாக நடத்துவதும் அனுமதிக்கப்பட்டவையல்ல, என முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள், உங்களது இரத்தமும், உங்களது உடமைகளும் மற்றும் உங்களது கண்ணியமும் வரம்பு மீறமுடியாதவைகளாகும்.

*(நூல்கள்: முஸ்னத் அஹ்மத் மற்றும் புகாரி)*

இனப்பாகுபாடும் இஸ்லாத்தினால் அங்கீகரிக்கப்பட்டது இல்லை, இதைப் பற்றி இறைவன் குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

**மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம் இன்னும், ஒருவருக்கொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் மிக்க கண்ணியமிக்கவர் உங்களில் மிகவும் பயபக்தியுடையவர்கள் தான் நிச்சயமாக அல்லாஹ், (யாவற்றையும்) நன்கறிந்தவன் நன்குணர்பவன்.**

***(அல்- குர்ஆன் 49: 13)***

**ஒரு அரபியானவன் அரபி அல்லாதவனை விடச் சிறந்தவன் அல்ல, ஒரு அரபி அல்லாதவன் ஒரு அரபியை விடச் சிறந்தவன் அல்ல, ஒரு சிவந்த நிறத்தை உடையவன் கருப்பு நிறத்தை உடையவனை விடச் சிறந்தவன் அல்ல. ஒரு கருப்பன் சிவந்த நிறத்தை உடையவனை விடச் சிறந்தவன் அல்ல. மாறாக உங்களில் சிறந்தவர் இறையச்சம் உடையவரே.**

***ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்***

இங்கே பயபக்தியுடையவர்கள் யாரென்றால், எல்லாவித பாவச்செயல்களை விட்டும் ஒதுங்கியவராகவும், மேலும் தன் வாழ்வில் நல்லவற்றையே செய்து வருபவராகவும், இறைவன் தடுத்தவற்றிலிருந்து ஒதுங்கி இறைவனது பிரியத்திற்கு உரியவராக மாறுவதற்கு தன்னை அற்பணித்துக் கொண்டவர்கள்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவரை அவர் பிறந்த இனத்தைக் காரணம் காட்டி அவரை ஒதுக்குவதும், புறக்கணிப்பதும், அவரை அவமானச் சின்னமாகக் கருதுவதும், பொது இடங்களில் அத்தகையவர்களைக் கண்ணியக் குறைவாக நடத்துவதும், இனப் பாகுபாடு காட்டுவதும் இஸ்லாத்தினால் தடை செய்யப்பட்டவை அத்தகைய தடை காரணத்தைப் பற்றித்தான் மேலே நாம் கண்ட இறைவசனம் இவ்வாறு கூறுகின்றது.

நீங்கள் அனைவரும் ஒரு தாய் தந்தையிலிருந்து பிறந்தவர்களே! உங்களிடையே நீங்கள் காணும் வேறுபாடுகள் யாவும் உங்களுக்குள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டே அன்றி வேற்றுமை பாராட்டுவதற்கல்ல என்று கூறி இனப்பாகுபாடு, சாதியைக் காரணம் காட்டி இழிபிறப்பாக நினைத்தல் ஆகிய மனிதநேயத்தை கொன்றொழிக்கும் மாபாதகச் செயல்களிலிருந்து மனிதனை இஸ்லாம் பாதுகாக்கின்றது.

முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள், தனிப்பட்ட ஒருவரையோ அல்லது ஒரு நாட்டையோ அவர் பெற்றிருக்கும் செல்வம், ஆட்சி, அல்லது குலத்திற்காக இஸ்லாம் முன்னிலைப்படுத்துவதில்லை. இறைவன் அனைவரையும் சமமான அளவில் தான் படைத்துள்ளான், அவர்களிடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வதற்கு அவர்கள் கொண்டுள்ள இறைநம்பிக்கையும், நற்செயல்களும் தான் காரணமாக அமைகின்றன.

ஓ! மனிதர்களே! உங்கள் இறைவனும் ஒருவன் தான், உங்களது மூதாதையரும் (ஆதம்) ஒருவர் தான். ஒரு அரபியானவன் அரபி அல்லாதவனை விடச் சிறந்தவன் அல்ல, ஒரு அரபி அல்லாதவன் ஒரு அரபியை விடச் சிறந்தவன் அல்ல, ஒரு சிவந்த நிறத்தை உடையவன் கருப்பு நிறத்தை உடையவனை விடச் சிறந்தவன் அல்ல. ஒரு கருப்பன் சிவந்த நிறத்தை உடையவனை விடச் சிறந்தவன் அல்ல. மாறாக உங்களில் சிறந்தவர் இறையச்சம் உடையவரே.

*ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்*

புகழ் அனைத்தும் இறைவன் ஒருவனுக்கே!

☆ ☆ ☆

# அன்னையரே அமுதூட்டுங்கள்!

**– கதீஜா மணாளன்**

ஒரு குழந்தை பிறந்ததும் அதன் குடலினை அடையும் முதல் உணவு தாய்ப்பால் ஆகும். இதனை இறைவன் மனிதனுக்கு வழங்கிய அருட்கொடை என்றால் அது மிகையாகாது. மேலும் புட்டிப் பாலைவிட தாய்ப்பாலில் கிடைக்கும் அபரிமிதமான பயன்களைக் கருத்தில் கொண்டுதான் அன்றைய வைத்தியர்களிலிருந்து இன்றைய மருத்துவர்கள்வரை அனைவரும் குழந்தைக்கு பரிந்துரைக்கும் உணவு தாய்ப்பால் ஆகும்.

இன்றைய இயந்திர உலகில் அரசு பணியிலும் இன்ன பிற பணியிலும் இருக்கும் பெண்கள் குறுகிய விடுப்பில் தாய்ப்பால் கொடுப்பதை புறக்கணிக்கின்றனர். இன்னும் சில பெண்கள் அழகு கெட்டுவிடும் என்ற அறிவீனத்தில் தாய்ப்பாலை புறக்கணிக்கின்றனர். இவர்கள் அனைவரும் தாய்ப்பாலினால் தாய்க்கும்-சேய்க்கும் கிடைக்கும் நன்மைகளை முழுமையாய் அறியாததுதான் அத்தகைய போக்கிற்கு காரணம். எனவே, தாய்ப்பாலைப் பற்றிய சில பயனுள்ள செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

**(தங்களுடைய குழந்தைகளுக்கு தம் மனைவியைக்கொண்டே) பால்ஊட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்புகிறவருக்காக, தாய்மார்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு (அவை பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டுவார்கள் இன்னும் (பாலூட்டும் இக்காலங்களில்) அவர்களுக்கு உணவும், உடையும் முறைப்படி (வழங்குவது) தகப்பன்மீது கடமையாகும். (அல்-குர்ஆன் 2: 233)**

தாய்ப்பால் குழந்தைகளுக்கு நல்ல சத்துணவாக விளங்குவதுடன் சிறந்த நோய் தடுப்பு சக்தியையும் அளிக்கின்றது அதிலும் குழந்தை பிறந்தவுடன் முதலில் சுரக்கும் பாலுக்கு (Colostrums) கொலஸ்ட்ரம் என்று பெயர் நம் ஊரில் இதனை “சீம்பால்” என்றும் கூறுவர் இது வெண்மைக்கும், மஞ்சளுக்கும் இடைப்பட்ட நிறத்தில் இருப்பதால் இதனை கெட்டுப்போன பால் என்றும் இது குழந்தைக்கு பேதியை ஏற்படுத்தும் என்றும் நம்பி கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இதனை குழந்தைக்கு கொடுப்பதில்லை. இந்த “கொலஸ்ட்ரம்” என்ற சீம்பாலில் ஏராளமான தாது மற்றும் சத்துக்கள் நிரம்பி காணப்படுகின்றன. இந்த சீம்பாலில் சுகர், லாக்டோஸ் மற்றும் புரதச் சத்து ஏராளமாக காணப்படுகிறது. மேலும் இது தாயின் நோய் எதிர்ப்பு சக்தி குழந்தைக்கு சென்றடைவதுடன் குழந்தைகளை ஆரம்ப பருவத்தில் தாக்கும் கிருமிகளின் தாக்குதலிலிருந்து பெரும்பாதுகாப்பு அளிக்கிறது.

புட்டிப்பாலைவிட தாய்ப்பால் எனும் இயற்கை உணவு மிகச்சிறந்த பலன்களை குழந்தைகளுக்கு அளிக்கின்றது மேலும் தாய்ப்பால் அருந்திய குழந்தைகள் புட்டிப்பால் குழந்தைகளைவிட ஆரோக்கியமாக விளங்குவதை சமீபத்திய பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. அமெரிக்காவைச் சேர்ந்த Dr. Alan Peter அமெரிக்காவில் பிறவியிலேயே ஆஸ்துமா நோயால் பீடித்த பல குழந்தைகளிடம் தனது ஆராய்ச்சியை மேற்கொண்டதில் இரண்டு ஆண்டுகள் நிறைவாக தாய்ப்பால் அருந்திய குழந்தைகள் புட்டிப்பால் குழந்தைகளைவிட 60% நோய்நிவாரணம் பெற்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது 23%லிருந்து 16.3%ஆக நோய் குறைந்துள்ளது மேலும் மற்றொரு அமெரிக்க ஆய்வாளரான Dr. Lukas தமது குழுவினருடன் மேற்கொண்ட ஆராய்ச்சியில் தாய்ப்பாலில் மேலும் பல வியத்தகு பலன்கள் இருப்பதாக கண்டுபிடித்துள்ளார் அவர் தமது அறிக்கையில் தாய்ப்பாலில் உள்ள ARCHIDONIC ACID (AA) & DOCOSAHEXANC ACID (DHA) போன்ற அமிலங்கள் காணப்படுகின்றன, இது குழந்தைகளின் கண் மற்றும் மூளை வளர்ச்சிக்கு பேருதவி செய்கின்றது இந்த அமிலங்கள் செயற்கை பால் பவுடர்களிலோ பசும்பாலிலோ கிடையாது. இறைவன் மனிதகுலத்திற்கு செய்த மிகப்பெரும் கருணை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் UNICEF போன்றவை வளர்ந்துவரும் நாடுகளில் குழந்தைகளுக்கு சக்திகுறைவால் மரணம் அதிகரிக்கிறது, எனவே குறைந்தபட்சம் தாய்ப்பாலை தவறாது ஊட்டுங்கள் என்று வருடாவருடம் அறிவுரை வழங்கிக்கொண்டே இருக்கின்றன. கடந்த வருடத்தின் ஆகஸ்ட் முதல் வாரம் அதாவது 1-7 ஆகஸ்ட் 2005ஐ உலக தாய்ப்பால் வாரமாக அறிவித்தது இந்திய அரசின் சுகாதார & குடும்ப நல அமைச்சகம். தாய்ப்பாலின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் பெரும் பலன்களையும் மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு வெளியிட்டுள்ள விளம்பர அறிக்கையில் தாய்ப்பால் பாதுகாப்பானது ஆரோக்கியமானது

என்று கூறி பல்வேறு பலன்களை சுட்டிக்காட்டி இருக்கிறது அவ்வறிக்கையின் சாராம்சத்தை இங்கே தருகின்றோம்.

**தாய்ப்பாலூட்டுவதற்கான சரியான வழிமுறைகள்**

✯ குழந்தை பிறந்த உடனே, அதாவது 30 நிமிடத்திற்குள் தாய்ப்பாலூட்டத் தொடங்குவது விரும்பத்தக்கது

✯ முதல் ஆறு மாதத்திற்கு தாய்ப்பால் மட்டுமே போதுமானது, அதாவது தாய்ப்பாலைத் தவிர வேறு எந்தப் பாலும், உணவும், திரவமும், நீரும் தேவையில்லை.

✯ போதுமான சரியான துணை உணவுகளை ஊட்டுதல் 6 மாதத்திற்குப் பிறகு தாய்ப்பால் ஊட்டுவதுடன் மற்ற துணை உணவுகளையும் வழங்கத் தொடங்கவும்.

✯ 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் தாய்ப்பாலூட்டுவது தொடரட்டும்.

**தாய்ப்பாலூட்டுவதால் குழந்தைகளுக்கு ஏற்படும் நன்மைகள்**

✯ தாய்ப்பால் குழந்தைகளுக்கான இயற்கை தந்த பரிசு.

✯ தாய்ப்பால் 5 புலன்களையும் - பார்த்தல், நுகர்தல், கேட்டல், சுவைத்தல், தொடுதல் என உணர்வுகளைத் தூண்டுகிறது.

✯ தாய்ப்பால் உணர்வுபூர்வ பாதுகாப்பையும், வாழ்நாள் முழுவதும் மனோ நிலை, சமூக நிலை மேம்பாட்டில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

✯ தாய்ப்பால் குடித்த குழந்தை அறிவு மிகுந்ததாகவும் தாய்ப்பால் குடிக்காத குழந்தையைவிட 1Q8 புள்ளிகள் வரை அதிகமாகவும் பெறும்.

✯ மூளை வளர்ச்சியை மேம்படுத்துகிறது. கற்கும் ஆற்றலைக் கூட்டுகிறது.

✯ தாய்பாலூட்டுவது குழந்தை பிறந்த பிறகான சீழ்த்தொற்று, வயிற்றுப்போக்கு, நிமோனியா போன்றவை தாக்காது காக்கும்

✯ தாய்ப்பால் 5 வயதுக்குட்ட குழந்தைகள் இறக்கும் எண்ணிக்கையை 13% வரை குறைக்கிறது.

**தாய்ப்பாலூட்டுவதால் தாய்மார்களுக்கு ஏற்படும் நன்மைகள்**

✯ தாய்ப்பாலூட்டுதல், தாய்மார்களுக்கு குழந்தைப் பிறப்புக்குப்பின் இரத்தஒழுங்கு, இரத்த சோகை ஏற்படும் அபாயத்தைத் தடுக்கிறது

✯ தாய்ப்பாலூட்டுதல், தாய்மார்களுக்கு நோய்த் தடுப்புத்திறனை அதிகரிக்கிறது அடுத்து தாய்மையடைவதைத் தாமதிக்கிறது. நீரிழிவு தாய்மார்களுக்கு இன்சுலின் தேவையைக் குறைக்கிறது.

✯ தாய்ப்பாலூட்டுவது தாய்மார்களுக்கு மார்பகப்புற்று, சினைப்பை புற்றுநோய் வலுவற்ற எலும்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்பைத் தடுக்கிறது.

✯ தாய்மார்கள் கர்ப்பத் காலத்தில் பெற்ற அதிக எடையைக் குறைக்க வாய்ப்பளிக்கிறது.

## நினைவிருக்கட்டும்

முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே குழந்தைகளுக்கு ஊட்டாமல் போனால் தாய்ப்பாலினால் கிடைக்கும் நன்மைகள் குறைந்து போகும். (நன்றி: சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம் - இந்திய அரசு) இத்தனை பலன்கள் இருந்தும்கூட நவீன இளம் தாய்மார்கள் தாய்ப்பாலை புறக்கணிப்பது நிச்சயம் அறியாமைதான் தாய்ப்பாலை புறக்கணித்த தாய்மார்களுக்கு கருப்பை மற்றும் மார்பக புற்றுநோய் அபாயம் உண்டு என்பதை மும்பையைச் சேர்ந்த முதன்மை புற்றுநோய் ஆராய்ச்சி மைய முதல்வர் டாக்டர் இந்திர நீலமித்ரா இப்படிக் கூறுகின்றார்.

அறியாமையின் காரணமாகவும் அழகு குறையும் என்ற காரணத்தாலும் பல தாய்மார்கள் தாய்ப்பால் கொடுக்க மறுக்கின்றனர் குறிப்பாக பாலூட்டும் தாய்மார்களுக்கு மார்பக புற்றுநோயின் ஆபத்து 50% குறைவு என்று கூறுகின்றனர்.

எனவே தாய்ப்பால் குழந்தைக்கு மட்டுமல்ல தாய்மார்களுக்கும் ஏற்ற மிகச் சிறந்த உணவு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இஸ்லாம் தாய்ப்பாலூட்டுதலை தாய்மார்களுக்கு வற்புறுத்துகின்றது. இறைவன் தனது திருமறையில்

**(தங்களுடைய குழந்தைகளுக்கு தம் மனைவியைக்கொண்டே) பாலூட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்புகிறவருக்காக, தாய்மார்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு (அவை பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டுவார்கள் இன்னும் (பாலூட்டும் இக்காலங்களில்) அவர்களுக்கு உணவும், உடையும் முறைப்படி (வழங்குவது) தகப்பன்மீது கடமையாகும். (அல்-குர்ஆன் 2: 233)**

மேற்கூறிய வசனத்தில் தலாக் விடப்பட்ட பெண்கள் விஷயத்தில் பாலூட்டும் பெண்களுக்கு உணவு, உடை வழங்குவது ஆண்கள் மீது கடமை என்பதை அறிய முடிகின்றது.

மற்றொரு இடத்தில் இறைவன் கூறுகையில்

**நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது) பற்றி நல்லுபதேசமும் செய்தோம் அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தான் இன்னும் (அவனுக்குப் பால்குடி மறக்கடித்து) அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும் (ஆகவே மனிதனே!) நீ எனக்கும், உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக (முடிவில்) என்னிடமே (உன்) மீளுதல் இருக்கிறது (அல்-குர்ஆன் 31: 14)**

மேலும் 46:15ல் கூறும்போது 2½ வருடம் அதாவது 30 மாதங்கள் பாலூட்ட வேண்டும் என்பதை உலக சுகாதார நலம் கருதி மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றது அருள்மறை.

எனவே கண்ணியமிக்க தாய்மார்களே! பாலூட்டுதல் என்பது வேலைக்குச் செல்லும் தாய்மார்களாகட்டும், தாய்பால் சுரக்கும் தன்மை குறைந்த பெண்களாகட்டும் கண்டிப்பாக நாம் பாலூட்ட ஆர்வம் காட்ட வேண்டும் இது என் மகவு என் உயிரிலிருந்து பிரிந்து வந்த உயிர் என்னுடைய சொத்து இக்குழந்தையை போஷித்து பாதுகாத்து வளர்ப்பது என்னுடைய இறைவன் எமக்கிட்ட கட்டளை இதற்காக நான் இறைவன் புறத்திலிருந்து கூலி கொடுக்கப்படுவேன் என்பதை ஒவ்வொரு தாய்மார்களும் உணர்ந்து போலியோ, ஊட்டச்சத்து குறைவு போன்ற நோய்களிலிருந்து விடுபட்டு இனிவரும் நாட்களில் திடகாத்திரமான நோய்களற்ற ஓர் சுகாதாரச் சமுதாயம் உருவாகிட அன்னையரே! அமுதூட்டுங்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அருள் செய்யப்படுவீர்கள்..

# “சுவனப்பாதை”

# நடத்தும் மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டி

## பரிசு விபரங்கள்

முதல் பரிசு : **SR.500** மதிப்புள்ள மொபைல் போன்
இரண்டாம் பரிசு : **SR.300** மதிப்புள்ள மொபைல் போன்
மூன்றாம் பரிசு : **ஸஹீஹுல் புகாரி 1 – 7 பாகங்கள்**
மற்றும்
ஆறுதல் பரிசுகள் : 10 நபர்களுக்கு

## விதிமுறைகள்

1. கட்டுரைகள் 3 முதல் 5 பக்கத்திற்குள் எழுதப்பட்டிருக்கவேண்டும்
2. தட்டச்சு செய்யப்பட்டிருந்தால் கட்டுரையும், எழுத்துருவும் **(Font)** ஒரு ∴பிளாப்பியில் சேமிக்கப்பட்டு பிரிண்ட் செய்யப்பட்ட கட்டுரையுடன் இணைக்கப்பட வேண்டும். கட்டுரை 1200 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்
3. சொந்தமான ஆக்கங்கள் தவிர்த்து வேறு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
4. மூலப்பிரதி மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுரைகள் திருப்பி கொடுக்கப்பட மாட்டாது.
5. புரட்சிகரமான கருத்துகள், புதுவிதமான அணுகு முறைகள், மார்க்கத்திற்கு முரண் இல்லாமை மற்றும் ஆதாரங்கள் போன்றவற்றை கணக்கில் கொண்டு மதிப்பெண்கள் அளிக்கப்படும்
6. கட்டுரையை மூடிய உறையிலிட்டு, பெயர் மற்றும் புனைப்பெயர் ஆகிய விபரங்கள் உறையில் மட்டும் எழுதி அனுப்பவேண்டும். கட்டுரைத்தாளில் பெயர் குறிப்பிடக்கூடாது
7. வெளிநாட்டில் வசிக்கக்கூடியவர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்
**8. கட்டுரைகளை சமர்ப்பிக்கவேண்டிய இடங்கள்:**
(1) இஸ்லாமிய அழைப்பகம் - ஸனாய்யியா (2) துறைமுக நூலகம் - துறைமுகம் (3) அல்ஹுதா நூலகம் - பலத்
**9. கட்டுரைகள் வந்துசேரவேண்டிய கடைசி நாள்: பிறை 30 ரபிவுல் அவ்வல் 1427 (ஏப்ரல் 28, 2006).**
10. சிறந்த கட்டுரைகள் சுவனப்பாதை மாத இதழில் வெளியிடப்படும். (மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு).
11. பரிசளிப்பு நாள் பின்பு அறிவிக்கப்படும்.
12. சுவனப்பாதை பத்திரிக்கை குழுவினர்களின் குடும்பத்தினர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை.
13. ஒருவர் ஒரு தலைப்பின் கீழ் மாத்திரம் கட்டுரை எழுதமுடியும் மற்றும் ஒருவருக்கு வழங்கப்பட்ட தலைப்பு மற்றவருக்கு வழங்கப்பட மாட்டாது.
14. கட்டுரை எழுத விரும்புவோர் தலைப்புகளை பதிவு செய்தபின்பே எழுதவேண்டும் மேலும் பதிவு செய்யாமல் எழுதப்படுகின்ற கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
15. ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

**தலைப்புகளைத் தேர்வு செய்ய கீழ்கண்ட எண்ணுக்குத் தொடர்புகொள்ளுங்கள்.**

**050 609 6740**
**(ஹாஜா முகைதீன்)**

## தலைப்புகள்

1. குழந்தை வளர்ப்பில் பெண்களின் பங்கு
2. நீங்கள் ஒரு நல்ல மனைவியா?
3. நீங்கள் ஒரு நல்ல கணவரா?
4. நீங்கள் ஒரு நல்ல பெற்றோரா?
5. தனிக்குடித்தனம் தரமானதா?
6. கருப்பை சுதந்திரம் பெண்ணுரிமையா?
7. இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்ப்பதேன்?
8. விவாகரத்து ஒரு கழுகுப்பார்வை
9. பெண்கல்வியின் முக்கியத்துவம்
10. த∴வாவில் பெண்களின் பங்கு
11. பெண்களும் உடற்பயிற்சியும்
12. அழகு சாதனப் பொருட்கள் - ஓர் ஆய்வு
13. கொடுப்பதும் எடுப்பதும் (மஹர், வரதட்சணை)
14. நமக்கென்று தனி நாளிதழ் - அவசியமும் அவசரமும்
15. பத்திரிக்கை தர்மம்
16. தொடரும் தொலைக்காட்சி அவலங்கள் (மெகா சீரியல்)
17. இயக்க வெறியும் இஸ்லாமும்
18. பிரிவுகளுக்கு மத்தியில் அழைப்புப்பணி
19. இணையம் (Internet) ஒரு கழுகுப்பார்வை
20. இணையத்தில் இஸ்லாம் (சாதகங்களும் பாதகங்களும்)
21. கல்வியில் கணினியின் பங்கு
22. செல்∴போன் சிந்தனைகள்
23. உலக பொருளாதாரம்
24. வியாபார நுணுக்கங்கள்
25. மல்ட்டி லெவல் மார்க்கெட்டிங் - ஓர் ஆய்வு
26. தவணைமுறை வியாபாரங்கள் - ஓர் ஆய்வு
27. முதல் உதவி மருத்துவங்கள்
28. மருத்துவமும் மனோதத்துவமும்
29. அறிவியல் சாதனைகளில் முஸ்லிம்கள்
30. இறைவனின் அருட்கொடை - ∴பைபாஸ் சர்ஜரி
31. டென்ஷன் ஆவது ஏன்?
32. அழைப்புப்பணியில் புதிய தொழில்நுட்பங்களின் பங்கு
33. முஸ்லிம்களின் நவீன எழுச்சியும் வீழ்ச்சியும்
34. தனிமனித வழிபாடு - ஓர் ஆய்வு
35. நபி(ஸல்) அவர்களின் நற்குணங்கள்
36. கற்காலத்தை நோக்கி மனிதன்
37. வெளிநாட்டு வாழ்க்கை (சாதகமும் பாதகமும்)
38. ஷியாயிசம் ஓர் ஆய்வு
39. மேற்குலகு தான் முன்னோடியா?
40. ஈராக் - ஒரு வரலாற்றுப் பார்வை
41. சவுதி அரேபியா - ஒரு வரலாற்றுப் பார்வை
42. இலங்கையில் இஸ்லாம் (வரலாற்றுப் பார்வை)
43. கிரிக்கெட்
44. ஷேர் மார்க்கெட்
45. சமுதாய உளவியல் பாதிப்புகள்
46. நபி(ஸல்) உலகத்திற்கோர் முன்மாதிரி

## வாசகர்கள்! – கருத்து!

**அன்பிற்கினிய “சுவனப்பாதை” வாசகர்களே!!! “சுவனப்பாதை” மாதஇதழில் வெளிவரும் கட்டுரைகள், தொடர்கள், செய்திகள் மற்றும் போட்டிகள் குறித்த உங்கள் மேலான கருத்துக்கள், எண்ணங்கள், என எதுவாகினும் எங்களுக்கு எழுத்து மூலம் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கலாம்.**

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**
**E-mail : suvanam@gmail.com**

# தேனீக்கள் (Honey Bee)- (தொடர்-3)

*-அறிவியல் தொடர்-* **E. உஸ்மான் அலி**

தேனீக்கள் வெகு தொலைவிலிருந்து சேகரித்து வரும் மலரின் குளுகோஸ் ஏறக்குறைய ஒரு பவுன்டு எடையுடைய தேனை உற்பத்தி செய்ய போதுமானதாகுமெனில் "நம் இறைவன் மகா தூய்மையானவன்"

நம் இறைவன் தான் நாடியவைகளுக்கு ஆற்றலை மிகைப்படுத்தக் கூடியவன் என்பது மீண்டும் இங்கே நிரூபனமாகின்றது. இவை முதலில் கூட்டை விட்டு வெளியில் சென்று மலர்களின் உள்ளே இருக்கும் மலரின் மதுவை(nectar) உறிஞ்சி உட்கொள்கின்றன. பின்னர் மலரின் மகரந்தத்தையும் சேகரித்து திரும்பி கூட்டிற்கு வருகின்றன. திரும்பிய உடன் மகரந்தத் தூளை நேரடியாக அறைக் கூட்டில் இட்டு சீல் வைக்கின்றன. இந்த மகரந்தத் தூள் நிறைய புரதம் மற்றும் தாதுத் பொருட்கள் நிறைந்ததாகும். மேலும் இவற்றில் 10 க்கு மேற்பட்ட அமினோ அமிலங்கள் உள்ளன. இதைத் தேனுடன் கலந்து லார்வாக்களுக்கு கொடுக்கின்றன. பின்னர் கூட்டை பராமரிக்கும் தேனீக்களின் வாயில் இவை வயிற்றிலிருந்து வெளிகொணர்ந்த தேனை கொடுக்கின்றன. இவை ஒரு துளி தேனை வெளியேற்ற 50 முறை வயிற்றிலிருந்து கக்குகின்றன. இவைகளினால் வெளியில் ஏதேனும் புதிய மலர் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை துல்லியமாக ஒரு வித்தியாசமான நடன அசைவின் மூலம் மற்ற தேனீக்களுக்கு தெரிவிக்கின்றன.

## நடன அசைவில் அசாதாரண மொழி

தேனீக்கள் ஆடும் அசைவுகளுக்கு ஒரு அர்த்தம் உண்டு.

தேனீக்கள் தங்கள் உணவிற்காக வெளியில் சென்று ஏதேனும் புதிய உணவாதாரத்தைக் கண்டறிந்தால் கூட்டிற்குத் திரும்பி அந்த இடத்தைப் பற்றிய துல்லியமான தகவல்களை வித்தியாசமான உடல் அசைவின் மூலம் தெரிவிக்கின்றன. உதாரணமாக உணவின் இருப்பிடம் 100 கஜத்திற்கு(yards) உட்பட்ட இடத்தில் ஒரு தேனியால் கண்டுபிடிக்கப்பட்டால் அது முதலில் அந்த மலரின் குளுகோஸை உறுஞ்சி தன் தேன் பையில் சேகரித்து கூடு திரும்புகின்றன. திரும்பியவுடன் கூட்டில் முதலில் இரண்டு செ.மீ அளவிற்கு சிறிய வட்டமாக (round dance) சுற்றுகின்றது. பின்னர் படிபடியாக சுற்றை பெரிதாக்கி சுற்றுகின்றது. பின்னர் அந்த சுற்றுக்கு எதிர் திசையில் சுற்றுகின்றது. இப்போது அதனுடன் இணைந்து மற்ற ஈக்களும் அந்த நடனத்தில் இணைந்துக் கொள்கின்றன. பின்னர் புதிய இடத்தை கண்டறிந்த தேனியால் கொண்டு வரப்பட்ட மலரின் மகரந்தம் மற்றும் மலரின் குளுகோஸ் போன்றவற்றின் வாசனையை நுகர்ந்து அது எத்தகைய தாவரம் என்பதை உறுதி செய்து கொள்கின்றன. பின்னர் கூட்டை விட்டு வெளியேறி 100 கஜத்திற்க்குள் பெரிய வட்டம் அடித்து உணவின் இருப்பிடத்தைக் கண்டறிகின்றன. இதே நேரத்தில் 100 கஜத்திற்கு அப்பால் உணவாதாரம் இருக்குமேயானால் தற்போது வேறுவிதமாக நடனத்தை அரங்கேற்றுகின்றன. தங்கள் பின்புறத்தை அசைத்தபடி(waggle dance) மையத்திலிருந்து நேராக சென்று பின்னர் அரைவட்டம் அடித்து அதற்கு எதிர் திசையில் அதைப் போன்றே சுற்றுகின்றன. மேலும் மிக அதிக தொலைவு என்றால் இவை சூரியனின் இருக்கும் திசையையும் உணவு இருக்கும் திசையையும் ஒரு காம்பசின் அமைப்பில் திசையை துல்லியமாக தெரிவிக்கின்றன. இவை கணிதம் அறிந்த ஈக்கள் என்று தவறாக நினைக்க வேண்டாம். எல்லாம் நம் இறைவன் ஜீன்களைக் கொண்டு நடத்தும் ஜால வித்தைகள்தான் இவைகள்.

இந்த முறையில் 10 கிலோ மீட்டர் தொலைவின் இருப்பிடத்தை கூட இவைகளினால் இந்த அதிசய முறையினால் மற்றவற்றிற்கு தெளிவுபடுத்த இயலுகின்றது. யார் இவைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தது? என்ன ஒரு திட்டமிட்ட பிரமிக்க வைக்கும் செயல்பாடுகள். இத்தகைய நடன அசைவுகளை வெளிச்சம் அறவே இல்லாத அடர்ந்த இருளிலும் அவைகளினால் எப்படி அறிந்துக் கொள்ள முடிகின்றது என்பது இதுவரை புரியாத புதிராகவே இருந்து வருகின்றது.

## தவறுதலின் பலன்தான் கில்லர் தேனீக்கள் (KILLER BEE)

1950 ஆண்டு பிரேசில் விஞ்ஞானிகளுக்கு அதிக தேன் கொடுக்கக் கூடிய ஐரோப்பிய தேனீக்களையும் அதிக வெப்பத்தைத் தாங்கி தேனை உற்பத்தி செய்யும் ஆப்ரிக்கத் தேனீயையும் சேர்த்து கலப்பினம் செய்தால் தங்கள் நாடான பிரேசில் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற ஒரு ரகத்தை உருவாக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் விளைவாக புதிய ரகம் உருவாக்க ஆப்பிரிக்க இராணித் தேனீக்கள் சிலவற்றை பிடித்து பிரேசில் கொண்டு சென்றார்கள். ஆனால் அவற்றில் சில ஈக்கள் தப்பித்து காட்டுக்குள் சென்றுவிட்டன. இந்த ஆப்ரிக்க தேனீக்கள் மிக அதிக அளவிற்கு பாதுகாப்பு உணர்வுக் கொண்டதாகும். மற்ற வகை தேனீக்களைக் காட்டிலும் மிக வேகமாக இவை பறக்கக் கூடியவை. இங்குதான் பிரச்சனை ஆரம்பமாகியது. இவை தங்கள் கூட்டை தாக்க வரும் எதிரிகளை மாத்திரம் அல்லாது அதன் சுற்று புறத்தில் வந்தால் கூட கொத்த ஆரம்பித்துவிடும். மற்ற தேனீக்களை விட எதிரி மூன்று மடங்கு தொலைவில் வரும் போதே இவை தாக்கும் தொழிலில் இறங்கி விடுகின்றன. ஆப்ரிக்காவின் அதிக வெப்ப நிலையைத் தாங்கிய இவைகளுக்கு தென் அமெரிக்கா கண்டத்தின் மிதமான வெப்ப நிலையை தாங்கி பரவிச் செல்வதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. இவற்றின் இராஜ்ஜியம் தங்கு தடையின்றி பரவிச் சென்றது. இவை வருடத்திற்கு 500 சதுர மைல்கள் வீதம் தங்கள் பரப்பளவை விஸ்திகரித்துக் கொண்டே செல்கின்றன. இதன் விளைவாக 1950ல் ஆரம்பித்த இவற்றின் பரவல் 1990ம் ஆண்டு அமெரிக்காவை எட்டிவிட்டது. 40 ஆண்டு காலத்தில் தென் அமெரிக்காவை கடந்து வட அமெரிக்காவை எட்டிவிட்டன. மேலும் இவை பரவிக்கொண்டே செல்கின்றன. இவற்றால் ஏராளமானோர் பாதிக்கப்படுகின்றார்கள். இவை 1990ம் ஆண்டு முதன்முதலாக அமெரிக்காவில் காணப்பட்டது. அவை டெக்ஸாஸிலிருந்து மெக்ஸிகோவிற்கும் பிறகு 1994ம் கலிஃபோர்னியா மகாணத்திற்கும் பரவின. உலக நாடுகளை அச்சுறுத்தி ஆக்கிரமிப்பு செய்யும் அமெரிக்கவில் இவை சப்தமின்றி தங்கள் ஆக்ரமிப்பைத் தொடர்கின்றன. இன்னும் 50 ஆண்டுகளில் முழு அமெரிக்காவும் ஆக்கிரமிக்கக் கூடிய அபாயம் இருக்கின்றது. மெக்ஸிகோவிலும் அர்ஜெண்டினாவிலும் இவைகளினால் பாதிக்கப்பட்டு

இறந்தவர்களும் உண்டு. அமெரிக்காவைப் பொறுத்தவரை உயிர்இழப்பு ஏற்படாவிடினும் 1990 ஆண்டு அதிகபடியான நபர்கள் இவற்றால் கடிக்கப்பட்டு பாதிக்கப்பட்டனர்.

### தேன்

தேன் என்பது குளுகோஸ், புரக்டோஸ், நீர், மற்றும் சில என்ஸைம்கள் சிலவகை எண்ணெய்கள் ஆகியவை அடங்கியதாகும். இவை மலரிலிருந்து கொண்டு வரும் குளுகோஸ் 40 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரை நீர் நிறைந்ததாக இருக்கும். ஆனால் இவை உற்பத்தி செய்யும் தேனில் 16 முதல் 18 சதவிகிதமே நீர் இருக்கும். இவற்றின் நிறம் மற்றும் சுவை தேனீக்களின் வயது மற்றும் அந்த பகுதியில் அமைந்திருக்கும் தாவர வகைகளைப் பொறுத்து மாறுபட்டு இருக்கும். பொதுவாக தேன் மஞ்சல் நிறமுடையதாய் இருக்கும். வெளிர் மஞ்சள் நிற தேன் தரம் வாய்ந்ததாய் இருக்கும். ஆரஞ்சு மரத்தின் பூக்களைக் கொண்டு தேனீக்களினால் உருவாக்கப்படும் தேன் முதல் தரமானதாகக் கருதப்படுகின்றது. குறைந்த தரம் வாய்ந்த தேன் பஹ்வீட் (Buckwheat) என்னும் தாவரத்திலிருந்து பெறப்படும் தேனாகும். ஏனெனில் அந்த தேன் அடர்ந்த மஞ்சள் நிறமானதாய் இருக்கும். தேனைக் கொண்டு மனிதர்கள் பயன் பெறவே எல்லாம் வல்ல நம் இறைவன் இவற்றை நமக்கு வசப்படுத்தி தந்துள்ளான். அவன் கருணையாளன்.



உலகம் முழுதும் தேனீக்கள் பொருளாதார ரீதியாக செயற்கை முறையில் (Bee Keeping) வளர்க்கப் படுகின்றது. நல்ல பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கக் கூடிய தொழிலாகவும் இது விளங்கிவருகின்றது. நல்ல ஆரோக்கியமான கூட்டில் 14 முதல் 23 கிலோ வரை தேன் சேகரிக்கப்படுகின்றது. இவை தங்கள் குளிர்கால உணவுத் தேவையைக் காட்டிலும் மிக கூடுதலாகும். இவற்றின் மிஞ்சிய தேன் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றின் உயிர் தேவைக்காக கொஞ்சம் தேன் விட்டு வைக்கப்படுகின்றது. உலகத்தின் தேன் தேவையை பெருமளவிற்கு செயற்கைத் தேன் வளர்ப்பின் மூலமே சரிகட்டப்படுகின்றது. 8 முதல் 10 பவுண்டு தேனை சேகரிக்கும் போது அந்த கூட்டிலிருந்து 1 பவுண்டு எடையுடைய தேன் மெழுகு கிடைக்கின்றது. தேன் என்பது ஒரு தூய கார்போ-ஹைட்ரேட் உணவாகும். இவை பல மருத்துவப் பயன்பாட்டிற்கு உதவுகின்றன.

இது நிறைய கலோரி நிறைந்ததாகும். உதாரணத்திற்கு ஒரு அவுன்ஸ் தேன் மூலம் ஈக்களுக்கு கிடைக்கும் ஆற்றல் ஒரு முறை உலகைச் சுற்றி வரப் போதுமானதாகும். இந்த தேன் மற்ற திரவத்தைக் காட்டிலும் அடர்த்தி நிறைந்ததாகும். ஒரு குவளை சர்க்கரை நீரின் எடை சுமார் 7 அவுன்ஸ் ஆகும். ஆனால் ஒரு குவளைத் தேனின் எடை 12 அவுன்ஸ் ஆகும். ஏறக்குறைய இருமடங்கு எடையாகும்.

### தேனின் இதர பயன்கள்

இந்த பூமிக் கோளின் தாவரப் பரவலுக்கு தேனீக்களின் பங்கு மிக இன்றியமையாததாகும். அமெரிக்காவில் மாத்திரம் நான்கில் ஒரு பங்கு தாவரம் தேனீக்களினால் இனப்பெருக்கம் அடைகின்றன. இது அமெரிக்காவிற்கு மட்டுமல்லாமல் உலகம் முழுவதற்கும் உள்ள பொதுவான பயனாகும். இவற்றினால் ஏற்படும் பயன்பாட்டின் மதிப்பு அமெரிக்காவில் மாத்திரம் 200 பில்லியன் டாலர் வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும் அமெரிக்காவை உதாரணமாக குறிப்பிடுவதை குறையாக எண்ணுபவர்கள் தயவு செய்து தவறாக எண்ண வேண்டாம். ஏன் என்று சொன்னால் இத்தகைய புள்ளி விபரங்களை சேகரிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ள இவர்களுக்கே போதிய கால அவகாசமும் பொருளாதாரமும் இடம் தருவதனால் இத்தகைய புள்ளி விபரங்கள் இவர்களிடமிருந்து கிடைக்கப்பெருகின்றன என்பதல்லாமல் வேறு ஒரு காரணமும் இல்லை.

இறைவனின் ஒப்பற்ற ஏற்பாட்டின்படி இவை நமக்கு இனிய தேனை மருத்துவப் பயன்பாட்டிற்கு நல்குவதோடு மட்டுமல்லாமல் வேறு பல அவசியத்தையும் இவற்றில் வைத்த நம் இறைவன் போற்றுதலுக்குரியவன்! புகழுக்குரியவன்! பகுத்தறிவு என்பது இறைவன் மனிதனுக்கு பிரத்யேகமாகக் கொடுத்துள்ளது போன்றே மற்ற சில உயிரினங்களுக்கும் இறைவன் தன் அருட்கொடையின் மூலம் வியக்கத்தக்க அம்சங்களை வைத்துப் படைத்துள்ளான் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

மனிதன் மற்ற எல்லாவற்றையும் விட தன்னை மிகப் பெரியதாக நினைக்கின்றான். இருப்பினும் தன்னை விட மிகத் தாழ்ந்த உயிரினமாக கருதப்படும் பல உயிரினங்கள் பெற்றிருக்கும் அபரிதமான ஆற்றல்கள் பல இவனைக் கொண்டு சாத்தியமற்றதாக இருப்பதை நடுநிலையோடு உணர்ந்து இறைவனின் வல்லமையை ஏற்று அவனுக்கு கட்டுப்பட்டு வாழ கல்வி ஞானத்தை வேண்டுவோம். நேர் வழி செல்வோம்.

***(நபியே)கல்வி கொடுக்கப்பட்டோர் இது உமது இறைவனிடமிருந்து வந்த உண்மை என அறிந்து அதை நம்புவதற்காகவும் அவர்களது உள்ளங்கள் அவனுக்கு பணிவதற்காகவும் (இவ்வாறு செய்கின்றான்) நம்பிக்கைக் கொண்டோருக்கு அல்லாஹ் நேர் வழியைக் காட்டுகின்றான். (அல்குர்ஆன் 22:54)***

அற்புதத்தையே இறக்கியிருக்கின்றது வல்லவனின் வான்மறை திருகுர்ஆன். அல்லாஹ் மகா தூய்மையானவன். உண்மையை அறியும் நோக்குடன் அல்லாஹ்வுடைய திருவேதத்தை ஒருவர் நாடுவாரேயானால் அங்கு நிச்சயமாக நிறைய சான்றுகளையும் அவனுடைய வல்லமையையும் அவர் காண்பார். இதில் எந்த சந்தேகமும் இல்லை. எவருடைய இதயத்தில் நோய் உள்ளதோ அவர்களோ

***இது பொய்யே தவிர வேறு இல்லை. இதை இவரே இட்டுக் கட்டிக் கொண்டார். மற்ற சமுதாயத்தினரும் இதற்காக இவருக்கு உதவினார்கள் என்று (ஏக இறைவனை) மறுப்போர் கூறுகின்றனர். அவர்கள் அநியாயத்தையும் பாவத்தையுமே கொண்டு வந்துள்ளார்கள். (அல்குர்ஆன் 25:04)***

# குறுக்கெழுத்துப் போட்டி - 2:5

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | |
| | | 3 | | | ■ | 4 | |
| | 5 | | | 6 | ■ | | |
| | | | | | 7 | | |
| | ■ | ■ | 8 | | ■ | | |
| | | | | | 9 | | 10 |
| | | | | 11 | | ■ | ■ |
| 12 | | | | ■ | | | 13 |

**இடமிருந்து வலம்**

2. நபி(ஸல்) அவர்களின் இயற்பெயர் (5)
3. ரமளான் நோன்பிற்கு பிறகு சிறப்புபெற்ற நோன்பு (3)
5. ஒருவரின் உதவிக்கு நாம் தெரிவிக்கும் சொல் (3)
12. ஆண்கள் இதனை அணிய நபி(ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள் (4)

**வலமிருந்து இடம்**

7. பருவேஷ் முஸாரப் எந்த நாட்டின் ஜனாதிபதி (5)
10. தனியாக தொழும் தொழுகையைவிட ஜமாஅத்தாக தொழுதால் எத்தனை மடங்கு நன்மை அதிகம் (7)
11. =லங்காவை இப்படியும் அழைப்பர் (4)
13. இந்தியாவில் இடிக்கப்பட்ட மசூதியின் பெயர் (3)

**மேலிருந்து கீழ்**

1. இலங்கையில் அதிகமாக உற்பத்தியாகும் குடிபானம் 3
4. பெங்களூரின் புதிய பெயர் (5)
6. தற்பொழுது செங்கடலில் மூழ்கிய கப்பல் எந்த நாட்டிற்கு சொந்தமானது (4)
9. இஸ்லாமிய வரலாற்றில் முக்கியம் வாய்ந்த முதல் போர் (3)

**கீழிலிருந்து மேல்**

5. உமர்(ரலி) அவர்கள் சில நேரம் பஜ்ர் தொழுகை முதல் ரக்அத்தில் யூசுப் அல்லது இதுபோன்ற அத்தியாங்களை ஓதுவார்கள் (3) **
8. குளிர்ந்த பானம் தயாரிக்க இப்பொருள் பயன்படும் (2)
10. முழு வளர்ச்சியடைந்து வெளிவர 16 நாட்கள் ஆகும் தேனீ யாது? (6) **
12. மென்பொருள் தயாரிப்பில் கர்நாடாகாவிற்கு அடுத்தபடியாக இருக்கும் மாநிலம் (5) **

**(** இக்குறியிட்ட கேள்விக்கான பதில்கள் கடந்த சுவனப்பாதை-2:4 இதழில் கிடைக்கும்)**

## விதிமுறைகள்

**1.** விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**

அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **முஹர்ரம்** மாதம் **30**-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

**2.** விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

**3.** நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

**4.** ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**5.** பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

**6.** ஆசிரியர் முடிவே இறுதியானது.

## குறுக்கெழுத்துப் போட்டி - 2:3 க்கான பரிசு பெறுபவர் விபரம்

**குறுக்கெழுத்துப் போட்டி - 2:3 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்.**

**J. சையது முஸ்தபா**

**குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.**

## குறுக்கெழுத்துப் போட்டி – 2: 3 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 உ | ஸா | 2 மா | பி | ன் | ஸை | த் |
| ■ | க் | 3 லி | ன் | மை | மை | ழ | 4 கி |
| 5 நி | கா | ஷ் | ■ | ■ | 6 இ | ■ | க் |
| யூ | ஷா | பா | லை | ஷூ | ல் | 7 து | ரு |
| யா | யா | லி | ஸ்ரே | தி | ஸ் | 8 ஆ | 9 து |
| ர் | 10 நி | ல | க் | க | ரி | த | ■ |
| க் | ல | அ | ல் | 11 அ | 12 னா | வ | ■ |
| 13 ஆ | ப் | பி | ரி | க் | கா | ன் | ■ |